# பொறுப்பு மிக்க பெற்றோர்களே ! உங்களுடன் ஒரு கணம்.....!!



உங்கள் பிள்ளைகளையும்,
அவர்கள் இரத்ததானத்தில்
பங்குபெறுவது பற்றியும்
சற்றுச் சிந்திப்போம் !!!

18 வயதிற்கு மேற்பட்ட 60 வயதிற்கு உட்பட்ட 50 கிலோ உடல் நிறையைக் கொண்ட ஆண், பெண் இருபாலாரும் 4 மாதங்களிற்கு ஒருமுறை எவ்வித பக்கவிளைவுகளும் இன்றி குருதித் தானத்தில் பங்குபற்றலாம்.

பொதுவாக உடலிலுள்ள 5 லீற்றர் அளவான குருதியில் 450 மில்லி லீற்றர் குருதியையே ஒரு தடவையில் தானமாக வழங்குகின்றீர்கள். இதனால் தங்களுடைய உடற் தொழிற்பாடுகளின் ஆரோக்கியமான சுமுக நிலைக்கு எவ்விதமான பங்கமும் ஏற்படப் போவதில்லை.

குருதிக் கூறுகள் உடலில் உற்பத்தியாக்கப்படுவதும், அழிக்கப்படுவதும் நாளாந்தம் நிகழ்கின்றது. இவ்வாறு அழிவடையும் குருதியில் ஒரு சிறு பகுதியே தானமாக வழங்கப்படுகின்றது. எனவே குருதித் தானத்தின் பின் விசேட உணவு வகைகள் உண்ணத் தேவையில்லை.



## ஒழுங்கான குருதித்தானம் தொடர்ச்சியான – தவணை முறைகளில் செய்யப்படுவதனால் ஏற்படும் நன்மைகள்

குருதி வழங்கலின் பின்னர் நுண் குருதிச் சுற்றோட்டத்தில் ஏற்படும் வினைத் திறனால் உடலில் புத்துணர்ச்சி ஏற்படுகின்றது.

குருதி வழங்கலிற்கு முன்னராக மருத்துவ ரீதியான உடற் பரிசோதனைகளும்

குருதி மாதிரியில் செய்யப்படும் இரத்தப் பரிசோதனைகளும்

தாங்கள் உடல் நலம் தொடர்பான பொதுவான நிலையை இலவசமாக அறிய உதவுகின்றன.

குருதித்தானம் செய்வதனால் கொலஸ்திரோல் அதிகரித்து ஏற்படும் மாரடைப்பிற்கான சாத்தியங்கள் ஒப்பீட்டளவில் குறைவதாக ஆய்வுகள் உறுதி கூறுகின்றன.

குருதி வழங்கலின் பின்னர் குருதிக் கூறுகளை உற்பத்தி செய்யும் என்பு மச்சைகளின் தொழிற்பாடு புத்துயிர்ப்பு அடைகின்றது.

# மதிப்பிற்கும் பாசத்திற்குமுரிய பெற்றோர்களே!

இரத்த தானத்தின் பெறுமதியைப் பற்றி நன்கு உணர்ந்த நீங்கள் உங்களுடைய பிள்ளைகளையும் இரத்ததானம் செய்வதற்கு ஊக்குவியுங்கள்.

குருதிக் கொடையில் ஒவ்வொரு தடவையும் ஈடுபடும்போது உங்கள் பிள்ளைகளும் உயிர்காக்கும் உன்னதப் பணியில் இணைந்து கொள்கின்றார்கள்.

இவ்வாறான உயிர்காக்கும் உயர்ந்த தொண்டில் ஈடுபடும் பிள்ளைகள் உயிர்களிடத்தும், குடும்ப உறவுகள் மீதும் பற்று மிக்கவர்களாக விளங்குவதனால், நற்பிரஜைகளாக எதிர்காலத்தில் மிளிர்வார்கள் என்பது உறுதி.

இரத்த வங்கியில் குருதிக் கொடை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் உங்களுக்கு அருகில் அவர்கள் இல்லாதவிடத்தோ (அவர்கள் வெளிநாடு செல்லுமிடத்து) அல்லது குருதி வழங்க இயலாத சந்தர்ப்பம் ஏற்பட்டாலோ உங்கள் தேவைக்குரிய குருதியினை வழங்க இரத்த வங்கி ஆவன செய்கின்றது.

ஒழுங்கான தவணையில் தொடர்ச்சியாகக் குருதிக் கொடை செய்வதன் மூலம் அவர்களுக்கும் வைத்திய சமுகத்தினருக்கும் இடையிலான உறவு வளர்வதனால் எதிர்காலத்தில் தங்கள் உறவுகளுக்கு வைத்திய உதவிகள் தேவைப்படுமிடத்து அவை விரைவாகவும், மிக இலகுவாகவும் கிடைக்கப் பெறுவது உறுதிசெய்யப்படுகிறது.

## பெற்றோர்களே !

உங்கள் உதிரத்தில் உருவான
உயிர்களுடன் வாருங்கள் !
அவர்கள்,
உதிரத்தால் உயிர்காக்கும்
உன்னதத்தில் சேருங்கள் !

---

எளிமையானதும்.....
இலகுவானதும்.....
இயற்கையானதும்.....
பாதகமான எதிர் விளைவுகளற்றதுமான
ஒரே தானம் !
இரத்ததானமே !!
இதனை
உணருங்கள் ! ஊக்குவியுங்கள் !!

---

தாகம் தீர்க்கத்
தேவை தண்ணீர் - உயிர் கொண்ட
தேகம் காக்கத்
தருவீர் செந்நீர்.

---

தொடர்புகளுக்கு:
**வைத்திய அதிகாரி,**
**இரத்த வங்கி,**
**யாழ். போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
**தொ. பே. இல. 021 222 5154 (233)**

**பொது சுகாதார பரிசோதகர்,**
**இரத்தவங்கி, யாழ்ப்பாணம்.**
**தொ. பே. இல, 077 6527639**

வெளியீடு:

**இரத்தவங்கி,**
**யாழ் போதனா வைத்தியசாலை,**

**கல்வி வெளியீட்டுப் பிரிவு**
**சமுதாய மருத்துவத்துறை,**
**யாழ். மருத்துவபீடம்.**

2005.

அனுசரணை:


# யாழ்டா

## வர்த்தக நிறுவனம்

C.P.T CAUSEWAY

RHINO SUPER MET

- கம்பி, சீமெந்து, சீற், கூரைத்தகடுகள்
- பல வர்ணப் பூச்சுக்கள்
- வாகனங்களுக்கும் உரிய ஸ்பிறே பெயின்ற்
- எனாமல் பெயின்ற்
- வீட்டுத்தளபாடங்கள்

**மொத்தமாகவும், சில்லறையாகவும்**
**பெற்றுக் கொள்ளலாம்**

HINODE POZZOLANA

MITSUI CEMENT

இல. 137; பலாலி வீதி
(தபாற்பெட்டி சந்தி அருகில்) திருநெல்வேலி.
தொ. பே. 021 4590299

Nandas Creations - 077 7703239